1986 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, திருமலை நாயக்கன் பெயரால் ஒரு அரசு போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, புதிய போக்குவரத்துக் கழகங்கள் துவக்கக் கூடிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தமைத்தல்.

596—*வினா எண் 8433—திரு. கே. பி. கே. சேகர், திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து செங்கற்பட்டு மாவட்டத்திற்கென தனியாகப் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. பி. கே. சேகர் : தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகத்தினுடைய நிர்வாக அலுவலகம் வேலூரில் இருப்பதால், செங்கற்பட்டு மாவட்டத்தில் வடகோடியில் உள்ள பொன்னேரி, கும்மிடிபூண்டி, திருவள்ளூர் போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் அந்த அதிகாரிகளோடு தொடர்பு கொள்வதற்கு சங்கடங்கள் இருக்கின்றன. இதைக் கருத்தில் கொண்டு பெரியதாக உள்ள இந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து செயல்படுத்தும் திட்டத்தை இனிமேலாவது அரசு கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1986 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஒரு போக்குவரத்துக் கழகத்தை பிரிக்க வேண்டுமென்றால் ஏற்கெனவே குறைந்தது ஒரு போக்குவரத்துக் கழகத்தில் 600 பேருந்துகள் இருக்கவேண்டும் என்ற ஒரு கருத்தினை சி. ஆர். பட்டாபிராமன் குழு அரசுக்கு பரிந்துரை செய்தது. அந்த பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது கேள்வியிலே கேட்கப்பட்டுள்ள பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தை பொறுத்தமட்டில் 600 பேருந்துகள் அந்தப் கழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் அதிகமான பேருந்துகள் அந்தக் கழகத்திலே இருந்தால்தான் அதை பிரிக்கமுடியும். மேலும் புதிய போக்குவரத்துக் கழகத்தை துவக்கவேண்டுமென்றால் குறைந்தது 350 பேருந்துகள் இருக்க வேண்டும் என்பது அந்தக் குழுவின் பரிந்துரையாகும். அந்த முறையில் புதியதாக போக்குவரத்துக் கழகத்தை துவக்க சிக்கல்கள் இருக்கின்றன. எந்த ஒரு அலுவலகமாக இருந்தாலும் ஒரே இடத்தில்தான் அமைய வேண்டும். சென்னை கூட நம்முடைய தமிழகத்தில் வடகோடியில் இருக்கிறது. அதைக் கூட மைய இடத்தில் கொண்டு செல்லவேண்டும் என்று சொல்லப்பட்டு வருகிறது. அந்த முறையில் மேலும் ஒரு புதிய போக்குவரத்துக் கழகத்தை துவக்குவது சரியான மாற்றுத் திட்டமாக இருக்காது என்று அரசு கருதுகிறது.

(முற்பகல் 9.20)

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய செங்கை மாவட்டத்தில் 350-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இன்றைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல எங்களுடைய செங்கை மாவட்டத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் 300 பேருந்துகள் மதுராந்தகம் செங்கற்பட்டு போன்ற பகுதிகளில் சென்று கொண்டிருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் இன்றைக்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் 600-க்கும் மேற்பட்ட பேருந்துகள், நம்முடைய தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகமும், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகமும் சேர்ந்து இன்றைக்கு நடத்திக்கொண்டு வருகின்றன.

இன்றைக்கு வடாற்காடு மாவட்டத்தில் 200-க்கு குறைந்த பேருந்துகள்தான் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் செயல்பட்டு வருகின்றன. எனவே, எங்களுடைய செங்கை மாவட்டத்தில் தனியாக ஒரு பேருந்துக் கழகம் அமைக்க வேண்டிய நியாயம் இருக்கிறது. இப்போது வேலூரில்தான் தலைமையகம் இருக்கின்றது. எனவே, எம்.டி.-ஐச் சந்திக்க வேண்டுமென்றால் வேலூருக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. காஞ்சீபுரத்திலும், சென்னையிலும் அதற்கான அலுவலகம் சரியாக இல்லை. எனவே, தனியாக ஒரு போக்குவரத்துக் கழகத்தை அரசு ஏற்றுக்கொண்டு அங்கே செயல்படுத்தித் தருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1986 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கே சுட்டிக் காட்டியது போல் செங்கை மாவட்டத்தைச் சுற்றி பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் தலைமையகங்கள் இருக்கின்றன. அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளும் செங்கை மாவட்டத்தைக் கடந்துதான் செல்லக்கூடிய அளவுக்கு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களாலும் அது சரியாக இணைக்கப் பட்டிருக்கிறது. அவர்களே. அதைச் சுட்டிக் காட்டினார்கள். பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திலே மொத்தம் 600 பேருந்துகள் இருப்பதாகவும் அதிலே 400 பேருந்துகள் செங்கை மாவட்டத்திலே செல்வதாகவும், 200 பேருந்துகள்தான் வடாற்காடு மாவட்டத்திலே செல்வதாகவும் கூறினார்கள். அதிலே இருந்து அந்த மாவட்டம் தனிக் கவனம் செலுத்தப் படக்கூடிய மாவட்டமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருது கிறேன். அந்த வகையில் அமைந்திருக்கிற தலைமையகமும் சரியாகத்தான் அமைந்திருக்கிறது. வடாற்காடு மாவட்டத் திற்குக் கூடுதலாகப் பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்றால் அந்த அளவுக்குத் தேவைப்பட்டால் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர் களே, தர்மபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அண்ணா போக்கு வரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்படுவது பற்றி ஆலோசனை இருக்கிறது. அப்படி பிரிக்கப்படக்கூடிய போக்குவரைத்துக் கழகத்தின் மற்றொரு பிரிவிற்கு சுப்ரமணிய சிவா அவர்களின் பெயரைச் சூட்டுவதற்குரிய வகையில் முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசனை செய்து அந்த வகையில் பெயர் சூட்டுவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கேள்வி மூலம் இது முடிந்து விட்டது. ஆகவே he has missed the bus.

சத்துணவு மையங்களுக்கு புதிய பாத்திரங்கள்.

597—*வினா எண் 7627—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களுக்கு புதிய பாத்திரங்கள் வாங் கிட அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்,